04.07.2025

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.3/2010**

**பி.வா.சா. 2–ராமசாமி த/பெ.போஜன்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

குழந்தை வேலு என்பவரிடமிருந்து நான் மற்றும் என்னுடைய தம்பி, என் அண்ணன் அனைவரும் வா.சா.ஆ.3 ப்படி உள்ள சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள வாசகங்கள் சரிதானா என்றால் சரிதான் உண்மைதான் என்றால் உண்மைதான். எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட 66 செண்ட் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச தனியாக வாய்க்கால் என்னுடைய பாக நிலத்தில் அமைத்தேனா என்றால் இல்லை. பொதுவான வாய்ககால் தான் . அந்த 66 செண்ட் நிலத்திற்கு தனியாக தண்ணீர் வாய்ககாலுக்காக நிலம் ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 பாகப்பத்திரத்தில் இந்த பொதுவான தண்ணீர் வாய்க்கால் அகலம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் என்னுடைய சகோதரர் வெள்ளையனிடம் கிரையம் வாங்கிய சொத்துக்கு உண்டான ஆவணம் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.4 ஆவணத்தில் ஆவது பூர்வீக சொத்திற்கு செல்லக்கூடிய தண்ணீர் பாய்ச்சல் வாய்க்காலின் நீளம் அகலம்

குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து வாய்க்காலை முதன் முதலாக வா.சா.ஆ.5 ஆவணத்தில் தான் நீளம், அகலம் குறிப்பிட்டு நான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். நானும் என் சகோதரரும் வாங்கிய கிரைய ஆவணத்திலும் மேலும் என்னுடைய பாகபத்திரத்தில் குறிப்பிடப்படாத வாய்க்கால் அகலத்தை பொறுத்து புதியதாக வா.சா.ஆ.5 ல் குறிப்பிட வேண்டிய அவசியம் என்னவென்றால் இந்த வா.சா.ஆ.5 ஆவணம் எழுதும் போது பூஸ்துதியில் வாய்க்கால் இருந்தது. அதனால் எழுதிக்கொடுத்தேன்.

தாவா சொத்தில் தென்வடல் வாய்க்கால் வழியாக பூர்வீக 66 செண்ட் நிலத்தை தவிர வேறு நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறதா என்றால் பாய்ச்சப்படுகிறது. அந்த தென்வடல் வாய்க்கால் வழியாக குழந்தை வேல் நிலத்திற்கும் தண்ணீர் போகிறது. தென்வடல் வாய்க்கால் வழியாக மொத்தம் 99 செண்ட் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் சரிதான். பாகப்பத்திரம் வா.சா.ஆ.2 ஆவணத்தில் வா.சா.ஆ.3 ஆவணம் நிலத்திற்கு தண்ணீர் பாசனம் உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தைவேலு எங்களுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.3 ஆவணத்தில் வா.சா.ஆ.2 ஆவண நிலத்தின் வழியாக தண்ணீர் பாசனம் உண்டு

என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குழந்தைவேலு நிலத்திற்கு வடபுறத்தில் கிழமேல் ஏரிவாய்க்கால் செல்கிறதா என்றால் ஆமாம். இந்த கிழமேல் ஏரிவாய்க்கால் வழியாக தண்ணீர் வந்து எங்களுடைய பூர்வீக வாய்க்கால் வழியாக தண்ணீர் வரும் என்றால் சரிதான். குழந்தைவேலு கிழமேல் ஏரிவாய்க்கால் இருந்து நேரடியாக தங்களுடைய நிலத்திற்கு தண்ணீர் பாய்த்து கொள்ளலாம். எங்களுடைய பூர்வீக வாய்ககாலுக்கு வரவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.

விவசாய நிலத்தை விட வாய்க்கால் பள்ளமாக இருந்தால் மடை வைத்து தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்றால் சரிதான். குழந்தைவேலு நிலத்திற்கு மேற்கு திசையில் தென்வடல் மண் ரோடு உள்ளது என்றால் சரிதான். இந்த மண் ரோட்டிற்கு கிழக்கேயும் குழந்தைவேலு நிலத்திற்கு மேற்கேயும் ஒரு நீர் வாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான். குழந்தைவேலு தாவா நிலத்திற்கு அப்பாற்பட்டு இருக்கும் தன்னுடைய நிலத்தில் இருந்து மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து குழாய் வைத்து இந்த மண் ரோட்டிற்கு கிழக்கே உள்ள தென்வடல் வாய்க்கால் வழி தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. இவ்வாறே குழந்தைவேலு

04.07.2025



தாவா சொத்திற்கு அப்பாற்பட்டு நிலத்தில் இருந்து தென்வடல் வாய்க்கால் வழியாக தான் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டீருந்தார் என நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் நீ.ம.சா.ஆ.1, 2 அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மண் ரோட்டிற்கு கிழக்கு திசையில் செல்ல செல்ல பள்ளம் என்று சொன்னால் பள்ளம் மேடு பள்ளம் மேடு என மாறி மாறி இருக்கும். குழந்தைவேலுவிடம் கிரையம் வாங்கிய சொத்தும் எங்களுடைய பூர்வீக சொத்தும் சமமாகத்தான் இருக்கும்.

குழந்தைவேலுவிடம் நாங்கள் கிரையம் பெற்ற நிலத்தில் கூட்டுகிணர் உள்ளதா என்றால் பாலடைந்த கிணர் ஒன்று உள்ளது. இந்த பாலடைந்த கிணற்றிக்கு தெற்கு திசையில் பாதை உள்ளதா என்றால் பாதை இல்லை. இந்த பாலடைந்த கிணற்றிக்கு நடு பொது வாய்க்கால் வழியாக தான் செல்லவேண்டும். நான் நடு பொது வாய்க்கால் என சொல்வது என் பூர்வீக நிலத்திற்கு செல்லும் வாய்க்கால் நான் கிரையம் வாங்கிய ஆவணம் வா.சா.ஆ.3 க்கு எதிராக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன பிரதிவாதி தர்மலிங்கம் என்னிடம் கிரையம் வாங்கிய பிறகு வா.சா.ஆ.5 எங்களுடைய பூர்வீக நிலத்திற்கு செல்லக்கூடிய வாய்க்கால் அவசியமற்றதாக ஆகிவிட்டது என்றால் சரியல்ல. தர்மலிங்கம்

04.07.2025



தன்னுடைய நிலத்திற்கு கிழமேல் வாய்க்காலில் இருந்தும் ரோட்டிற்கு கிழக்கே உள்ள தென்வடல் வாய்க்காலில் இருந்தும் தண்ணீர் எடுத்துக்கொள்ள வசதி உள்ளது என்றால் சரியல்ல. மேலும் தென்வடல் வாய்க்கால் இடுப்பு அளவிற்கு பள்ளம் உள்ளது வாய்க்கால் விவசாய நிலம் மேடாக உள்ளது. நான் அவ்வாறு தென்வடல் வாய்க்கால் இடுப்பு அளவு பள்ளம் உள்ளதாகவும் விவசாய நிலம் மேடாக உள்ளதாகவும் தவறாக சாட்சி அறிக்கிறேன். தாவா நிலத்தை கிரையம் கொடுத்து 13 ஆண்டுகளாக வெளியில் வசிப்பதால் நான் தவறாக சாட்சி அறிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று தென்வடல் வாய்க்கால் இடுப்பு அளவு பள்ளம் இருந்தால் அதன் வழியாக தண்ணீர் வந்து கிழமேல் வாய்க்கால் வழியாக தண்ணீர் செல்லமுடியாது என்றால் சரியல்ல. கல் வைத்து பாலம் கட்டிதான் எங்களுடைய கிழமேல் வாய்க்காலுக்கு தண்ணீர் எடுக்கிறோம்.

அதே போன்று ரோட்டிற்கு கீழ்புறம் உள்ள ஏரிவாய்க்காலில் கொண்டை வைத்து குழந்தைவேலுவிற்கு வசதி உள்ளது என்றால் சரிதான். நான் தர்மலிங்கத்திற்கு கிரையம் கொடுத்ததால் அவருக்கு அனுசரணையாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.T. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.